# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 06.08.2021 supeedsam.com supeedsam@gmail.com







# நாடு அபாய கட்டத்தில்

## மணித்தியாலத்துக்கு மூவர் பலியாகும் நிலை

### இலங்கை மருத்துவ சபை கடும் எச்சரிக்கை

ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் மூன்று பேர் கொரோனா தொற்றினால் உயிரிழக்கின்ற பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மருத்துவ சபையின் உப தலைவர் விசேட மருத்துவ நிபுணர் மனில்க சுமனதிலக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கையில் கடந்த காலத்தில் நாளாந்தம் 20 ஆயிரம் பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்பட்ட போதிலும் 2000 தொடக்கம்

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் பேராபத்து நெருங்குகிறது

### கடந்த 24 மணித்தியாலத்தில் 507 தோற்றுகள்: 9மரணங்கள்



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்குமாகாணத்தில் வழமைக்கு மாறாக கடந்த 24 மணித்தியாலயத்தில் 507கொவிட் தொற்றுகளும் 09மரணங்களும் ஏற்பட்டுள்ளன. இது கிழக்கில் மற்றுமொரு பேராபத்து நெருங்குவதை கட்டியம்கூறிநிற்கிறது என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## உடன் நாட்டை முடக்குங்கள்

### தேரர் விடுத்துள்ள கோரிக்கை



இலங்கையில் கொரோனா தொற்றினால் ஏற்பட்டுவரும் அனர்த்தங்களை கட்டுப்படுத்த முடியவில்லை எனின் அரசாங்கம் ஒன்று தேவையில்லை என கடும்போக்குவாத சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

மட்டு.வின் நிலைமை

## 24 மணித்தியாலயத்தில் இருவர் உயிரிழப்பு: 229 பேருக்கு தோற்று

(மட்டு சுபீட்சம் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணித்தியாலத்தில் கொரோனா தொற்றினால் இருவர் உயிரிழந்ததுடன், 229 பேருக்கு தொற்று உறுதி யானதையடுத்து மாவட்டத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 126 ஆகவும் கொரோனா தொற்றுக்குள்ளானோர் 8539 ஆக அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டிருப்பு சுகாதார அதிகாரி பிரிவில் ஒருவரும் கோறளைப்பற்று சுகாதர அதிகாரி பிரிவில் ஒருவரும் கடந்த 24 மணித்தியாலயத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

அதே வேளை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் கீழ்

02 ஆம் பக்கத்தில்...

## காரைதீவில் இலங்கை வங்கி,தபாலகம் மூடப்பட்டது

### நால்வருக்கு கொரோனா; ஏனையோர் தனிமைப்படுத்தலில்

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவிலுள்ள இலங்கைவங்கிக்கிளை மற்றும் பிரதான தபாலகம் என்பன கொரோனா காரணமாக மூடப்பட்டுள்ளன என காரைதீவுப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டர்டர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார்.

இலங்கை வங்கிக் கிளையில் மூன்று ஊழியருக்கும், தபாலகத்தில் ஒரு ஊழியருக்குமாக மொத்தம் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நால்வரில் மூவர் காரைதீவைச்சேர்ந்தவர்கள். ஒருவர் அம்பாறையைச்சேர்ந்தவர். அனைவரும்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பிலும் ஒன்று திரண்ட கல்விச் சமூகம்



(மட்டுநிருபர்)

பல்கலைக்கழக ஆணைக்குழுவை சுயாதீனமாகவும் அதிகாரம் மிக்கதாகவும் மாற்றி கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டத்தை கிழித்தெறி எனும்

02 ஆம் பக்கத்தில்...

## கடமை முடித்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய பெண்ணை வழி மறித்து தாலி கோடி அறுப்பு

### துறைநீலாவணையில் சம்பவம்



( ரக்ஸனா)

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் கடமையாறிவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடுதிரும்பிய பெண் ஒருவரை மோட்டார் சைக்கிளில்

02 ஆம் பக்கத்தில்...

## கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் விடுதலை

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்ட 44 ஆசிரியர்களுக்கும் கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

ஒவ்வொருவரும் தலா ஒரு இலட்சம்

02 ஆம் பக்கத்தில்...

## சிறுமி ஹிசாலினி படுகோலை மட்டு.மாநகர சபையில் கண்டன தீர்மானம்



(மட்டுநிருபர்)

சிறுமி ஹிசாலினி உட்பட பல சிறுமிகள் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதின் வீட்டில் துஸ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதற்கு மட்டக்களப்பு மாநகர சபையில் கண்டன தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...
















## யாழில் இந்திய துணைத்தூதரகத்திற்கு முன்னால் அணிதிரளவுள்ள மீனவர்கள்

(யாழ்.கீதன்)

இந்திய மீன்பிடியாளர்கள் மீது நாம் பகைமை காட்டவில்லை. ஆனால் நாளந்தம் அவர்களால் எமது வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளள முடியாதென தெரிவித்துள்ள யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன பிரதிநிதிகள், இந்திய மீன்பிடியாளர்களின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில். தாம் யாழ்ப்பாணத்திலுள்ள

02 ஆம் பக்கத்தில்...











## எரிவாயுவுக்கும் தட்டுப்பாடு

இலங்கை முழுவதும் பால் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், தற்போது எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் நுகர்வோர் பாரிய அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

நாட்டில் நிலவும் டொலர் பற்றாக்குறை

02 ஆம் பக்கத்தில்...




## சிறுமி ஹிசாலினி படுகொலை மட்டு.மாநகர

மட்டக்களப்பு மாநகரசபையின் 50வது அமர்வு நேற்று(05) மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

வழமையான சம்பிரதாயங்களுடன் ஆரம்பமான சபை அமர்வின்போது கடந்த அமர்வின் கூட்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அனுமதிபெற்றப்பட்டதுடன் மாநகரசபையினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கான சபை அனுமதியும் பெறப்பட்டது.

இதன்போது சிறுமி ஹிசாலி உட்பட பல சிறுமிகள் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியூதின் வீட்டில் துஸ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் மாநகரசபை உறுப்பினர் வே.தவராஜாவினால் கண்டன தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டு சபையினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

குறித்த சிறுமிக்கு நடந்த அநீதிக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன் இதன்போது குறித்த சிறுமிக்கு நடந்த அநீதிக்கு துணைபோன அனைவருக்கும் சட்டத்தின் மூலம் தண்டனைபெற்றுக் கொடுக்க ஜனாதிபதி நடவடிக்கையெடுக்கவேண்டும் என கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த கண்டன தீர்மானத்தினை ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பது எனவும் சபையினால் தீர்மானிக்கப்பட்டது.

இன்றைய சபை அமர்வின்போது மாநகரசபையின் பல்வேறு செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டதுடன் வாதப்பிரதிவாதங்களும் இடம்பெற்றன.




## எரிவாயுவுக்கும் தட்டுப்பாடு

காரணமாக லாஃப்ஸ் நிறுவனம் எரிவாயு இறக்குமதியை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளமையை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்தமையை அடுத்து இலங்கையிலும் எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு எரிவாயு நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தன. எனினும் எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்படவில்லை.

மேலும் டொலர் பற்றாக்குறை நிலவுகின்ற நிலையில் கடன் உறுதி கடிதத்தை திறப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளமையினால், லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் இறக்குமதி செய்வதில் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதாக அறிவித்திருந்தது.

இதனையடுத்து, லாஃப்ஸ் நிறுவனம் எரிவாயு இறக்குமதியை நிறுத்துவதற்கு தீர்மானித்தால், அதற்கான கேள்வியை நிரப்புவதற்கு லிட்ரோ நிறுவனத்திற்கு முடியும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஊடாக கடந்த ஜூலை 20ஆம் திகதி அறிவித்திருந்தார். எனினும், லாஃப்ஸ் எரிவாயுக்கு பதிலாக லிட்ரோ எரிவாயு கொள்கலனை விநியோகிக்குமாறு நிறுவனத்திடமிருந்து தமக்கு அறிவிக்கப்படவில்லையென லிட்ரோ விநியோகமுகவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் விடுதலை

ரூபாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வாகன பேரணியின் போது பொலிஸார் கைப்பற்றிய வாகனங்களையும் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு கோரி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் வாகன பேரணி ஒன்றை மேற்கொண்ட போதே, இவர்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளும் எதிர்மறையானதாக அமைந்துள்ளன.

## யாழில் இந்திய துணைத்தூதரகத்திற்கு முன்னால் அணிதிரளவுள்ள

இந்திய துணை தூதரகம் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஊடக அமையத்தில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை குறித்த சமாசங்களின் பிரதிநிதிகள் நடத்தியிருந்தனர். இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்திருந்தனர். மேலும் அவர்கள் கூறுகையில்,

இந்திய கடற்றொழிலாளர்களது அத்துமீறிய, எல்லை தாண்டிய, சட்டவிரோத ரோலர் இழுவைமீன்பிடி முறையால் எமது சொத்துக்கள் நாளாந்தம் அபகரிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன. இதை தடுத்து நிறுத்தி எமது தொழில் நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பை உறுதிசெய்து தருமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் அது தொடர்பான நடவடிக்கைகளை அவர்கள் துறைசார் தரப்பினரூடாக மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் சில தினங்களுக்கு முன்னர் தீவகம் மற்றும் தாளையடி பகுதிகளுக்கள் ஊடுருவிய இந்திய மீனவர்கள் எமது கடற்றொழிலாளர்களது பல கோடி பெறுமதியான வலைகளை அறுத்து நாசமாக்கிச் சென்றுள்ளனர். இவ்வாறான செயற்பாட்டை இந்திய மீனவர்கள் நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்திய குறித்த சமாசங்களின் பிரதிநிதிகள் இலங்கை அரசு இந்திய அரசிடம் இது தொடர்பில் பேசி நிரந்தர தீர்வை காணவேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

மேலும் இந்திய மீனவர்கள் தமது சட்டவிரோத செயற்பாடுகளை மறைப்பதற்கு மீண்டும் இலங்கை கடற்படையினர் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி பிரச்சினையை திசைதிருப்பி வருகின்றனர்.

ஆனால் சில தினங்களுக்கு முன்னர் இந்திய மீனவர்களின் ரோலர்களால் எமது கடற்றொழிலாளர்களின் பல இலட்சம் பெறுமதியான வலைகள் அழிக்கப்படவிருந்த நிலையில் இலங்கை கடற்படையினர் உடனடியாக அவ்விடத்தக்கு வந்து எமது கடற்றொழிலாளர்களை பாதுகாத்திருந்தனர். இந்நிலையில் எமது சொத்துக்களை பாதுகாத்துதந்த கடற்படையினருக்கு எமது சமாசங்களின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

## கடமை முடித்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய பெண்ணை

காத்துநின்ற இருவர் குறித்த பெண்ணை வழிமறித்து மோட்டர் சைக்கிளில் இருந்து தள்ளிவிட்டு விட்டு அவரது கழுத்தில் இருந்த 6 அரைப்பவுண் தாலிக் கொடியை அறுத்துச் சென்ற சம்பவம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிலுள்ள துறைநீலாவணைக்கு செல்லும் பிரதான வீதியில் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

துறைநீலாவனையை வசிப்பிடமாக கொண்ட குறித்த பெண் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் கடமையாற்றிவரும் நிலையில் சம்பவதினமான வியாழக்கிழமை மாலை கடமையை முடித்துக் கொண்டு காரியாலத்தில் இருந்து தனியாக வீட்டிற்கு மோட்டர்சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தபோது மாலை சுமார் 5.10 மணியளவில் துறைநீலாவணை பிரதான வீதியில் பல்சர் ரக கறுப்பு மோட்டார் சைக்கிளில் காத்திருந்த இருவர் மோட்டர்சைக்கிளில் பிரயாணித்த அவரை வழிமறித்தபோது அவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளார்.

அதனை தொடர்ந்து கொள்ளையர்கள் அவரை மோட்டர்சைக்கிளில் இருந்து தள்ளிவிட்டு அவரின் கழுத்தில் இருந்த 6 அரை பவுண் கொண்ட தாலிக் கொடியை அறுத்து விட்டு பாதனிகளை கைவிட்டு எடுத்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளனர்.

இதனையடுத்து அவர் சத்தமிட்டபோது அருகில் இருந்தவர்கள் உடனடியாக சென்று அவரை காப்பாற்றியதுடன் அவரின் கழுத்தில் காயம் ஏற்பட்டுள்ளதுடன் மோட்டர் சைக்கிளும் சேதமடைந்துள்ளதுடன் சம்பவ இடத்துக்கு சென்ற கல்முனை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பிலும் ஒன்று திரண்ட கல்விச்

தொனிப்பொருளில் நேற்று மட்டக்களப்பில் மாபெரும் கண்டன பேரணி ஒன்று இடம் பெற்றுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் சிவில் சமூகம் இணைந்து இன்றைய தினம் ஒன்றிணைவோம் உரிமை வென்றெடுப்போம் என்ற கோஷத்துடன் குறித்த கண்டனப் பேரணியை முன்னெடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இருந்து பேரணியாக ஆரம்பித்து மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகாமையில் போராட்டத்தை முடித்துள்ளனர். ஆசிரியர்களின் போராட்டம் நாடுதழுவிய ரீதியாக இடம்பெற்று வருகின்ற நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றைய தினம் அனேகமானோர் ஆதரவு வழங்கியுள்ளனர்.

இதன்போது கொத்தலாவல சட்டத்தை கல்வியில் திணிக்காதே இலவச கல்வியை பறிக்காதே என பல கோஷங்களுடன் போராட்டக்காரர்கள் பதாதைகள் தாங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உடன் நாட்டை முடக்குங்கள் தேரர் விடுத்துள்ள கோரிக்கை

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், கொரோனா தொற்றுப் பரவல் கட்டுப்பாடுகளை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா உட்பட ஏனைய பிரச்சனைகளை கட்டுப்படுத்த முடியாது போனால் அரசாங்கம் தேவையில்லை. நாடு முழுமையாக முடக்கப்பட வேண்டும். இதனைத் தான் இப்போது செய்ய வேண்டி இருக்கின்றது. இது பிரச்சனை தான். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்.

ஆனால் ஒன்றும் செய்ய முடியாது. இந்த நிலைமையில் நாடு போனால் இதனை விட மோசமான முறையில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்.ஒரு மாதத்திற்கு நாடு முடக்கப்பட வேண்டும். ஆனால் யாரையும் வீதிகளில் இறங்க அனுமதிக்கக் கூடாது. அத்தியாவசிய சேவையை தவிர ஏனையவர்களை வீடுகளிலேயே முடக்க வேண்டும்.

மக்களுக்கான உணவுப் பொருட்களை இலவசமாக வழங்குங்கள். நாட்டில் கொரோனாவினால் ஏற்படும் மரணங்கள் எதிர்வரும் காலத்தில் 200, 300 தாண்டிச் செல்லும். இறந்தவர்களை தீ மூட்டவோ அல்லது புதைக்கவோ முடியாத நிலையை எதிர்கொள்ள வேண்டிவரும்.

எனவே நாட்டை முழுமையாக முடக்காது போனால் கொரோனாவை அழிக்க முடியாது. தற்போது நாட்டை முடக்காது போனால் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கே மனிதர்கள் இல்லாமல் போகும் நிலை ஏற்படும். மக்கள் வெளியில் வரப் பயப்படுவார்கள். அத்தகைய நிலமைக்கு நாட்டை தள்ளாது உடனடியாக நாட்டை முழுமையாக முடக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

## 24 மணித்தியாலயத்தில் இருவர் உயிரிழப்பு

உள்ள பிரதேச சுகாதார அதிகாரிகள் பிரிவு என சுகாதார அதிகாரி பிரிவுகளான மட்டக்களப்பில் 43 பேரும், காத்தான்குடியில் 33 பேரும், வாழைச்சேனையில் 7 பேரும், ஓட்டுமாவடியில் ஒருவரும், செங்கலடியில் 93 பேரும், கோறளைப்பற்று மத்தியில் ஒருவரும்,

ஏறாவூரில் 4 பேரும், வவுணதீவில் 23 பேரும், வெல்லாவெளியில் 17 பேரும், ஆரையம்பதியில் 2 பேரும், கிரானில் 5 பேர் உட்பட 229 பேர் தொற்று உறதிப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து மாவட்டத்தில் 8539 ஆக அதிகரித்துள்ளதுடன் தொடர்ந்தும் வைத்திய சாலைகளில் தங்கியிருந்து 1233 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்என அந்த புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## கிழக்கில் பேராபத்து நெருங்குகிறது

மட்டக்களப்பு மாவட்டத்தில் 230தொற்றுக்களும் 2மரணங்களும் சம்பவித்துள்ளன.அம்பாறை பிரிவில் 127தொற்றுக்களும் 1மரணமும் ,கல்முனை சுகாதாரப்பிராந்தியத்தில் 81தொற்றுக்களும் 6மரணங்களும் ,திருகோணமலை மாவட்டத்தில் 70தொற்றுக்களும் ஏற்பட்டுள்ளன.

கடந்தசில நாட்களாக நாட்டின் ஏனைய மாகாணங்களில் சடுதியாக ஏற்பட்டுள்ள சடுதியான நோயாளர் மற்றும் மரணங்களின் அதிகரிப்பு கிழக்கு மாகாணத்திலும் ஏற்பட்டுவருவதைக் காணக்கூடியதாயுள்ளது.

கடந்தவாரங்களில் கிழக்கில் 200250நோயாளர்களும் 23 மரணங்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால் தற்போது அத்தொகை மும்மடங்காக மாறிவருகிறது. இது கிழக்கு மாகாணத்திற்கு அபாய அறிவிப்பாக கருதமுடியும்.

தடுப்பூசியைப் பெற்றுவிட்டோம் என்ற நினைப்பில் சுகாதாரநடைமுறைகளில் ஒருவித தளர்வை கடைப்பிடிப்பதாகவே பார்க்கிறோம். எனவே தயவுசெய்து அனைவரும் தொடர்ச்சியாக சுகாதாரநடைமுறைகளை இறுக்கமாகக்கடைப்பிடிக்க வெண்டுகிறேன் என்றார்.

## காரைதீவில் இலங்கை வங்கி, தபாலகம்

கொவிட் இடைத்தங்கல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இவை இழுத்துமூடப்பட்டன. அங்கு பணியாற்றிய ஏனையோர் தனிமைப்படுத்திவைக்கப்பட்டுள்ளனர். என வும் அவர் தெரிவித்தார். இதேவேளை இதுவரை மாளிகைக்காடு மாவடிப்பள்ளி காரைதீவு அடங்கலான இக்காரைதீவு சுகாதாரப்பிரிவில் இதுவரை 307பேர் கொவிட் தொற்றுக்குள்ளாகி 282பேர் குணமாகியுள்ளனர். இறுதியாக 6பேர் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். தற்போது 19பேர் மாத்திரமே சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

இதுவரை மாளிகைக்காடு மாவடிப்பள்ளி காரைதீவு அடங்கலான இச்சுகாதாரப்பிரிவில் 6பேர் கொரோனா காரணமாக மரணித்துள்ளனர்.

## நாடு அபாய கட்டத்தில் மணித்தியாலத்துக்கு

3000 வரையிலான தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

எனினும், இன்று வெறும் 10 ஆயிரம் பி.சி.ஆர் பரிசோதனையே நடத்தப்படும் போதிலும் 2 ஆயிரம் தொற்றாளர்கள் வரை அடையாளம் காணப்படுகின்றனர்.

அதுமாத்திரமன்றி, நாட்டில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கையை பாருங்கள். ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் சுமார் மூன்று பேர் மரணிக்கின்றனர். கடந்த இரண்டு நாட்களில் மட்டும் பதிவான மரணங்களின் எண்ணிக்கையை பார்க்கும்போது இந்த நிலைமையை நன்கு அவதானிக்க முடியும்.

கொரோனா வைரஸ் மற்றும் தடுப்பூசிக்கு இடையேயான போட்டியில் எமக்கு வெற்றி கிடைக்க வேண்டுமானால் இன்னும் குறுகிய காலம் பயணக் கட்டுப்பாடுகள் மட்டுமே சிறந்த பதில்.அல்லது தனித்தனியாக சுய பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பது நல்லது என அவர் தெரிவித்தார்.

# தேசிய விளையாட்டு விழா நிகழ்வு ஓட்டமாவடியில்



(ந.குகதர்சன்)

இலங்கை அரசாங்கம் நடப்பாண்டு தொடக்கம் 'டங்கன் வைட்' அவர்கள் ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்றெடுத்த நாளாகிய ஜீலை 31 ஆம் திகதி விளையாட்டு ஊக்குவிப்பு மற்றும் உடற்பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தேசிய விளையாட்டு தினமாக பிரகடனம் செய்துள்ளது.

அதனை முன்னிட்டு தேசிய விளையாட்டு தின நிகழ்வுகள் ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் நேற்று காலை பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் செயலகத்தில் அரச நிருவாக சுற்றிக்கையின் பிரகாரம் இடம்பெற்றது.

செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.இன்ஷாத் முஹம்மட் அலி ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முதலில் தேசிய கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்டதனைத் தொடர்ந்து, உடற்பயிற்சி மற்றும் உள்நாட்டு இயற்கை உற்பத்தி உணவுகளின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துவதாக பிரதேச செயலாளரினால் விசேட உரையும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து அலுவலக உத்தியோகத்தர்கள் 15 நிமிட எளிய உடற்பயிற்சி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

மேலும் ஆரோக்கியமான சந்ததியினை உருவாக்கி வினைத்திறனும் உற்பத்தித் திறனும் மிக்க மனித வளத்தை உருவாக்குவதே தேசிய விளையாட்டு தினத்தின் குறிக்கோளாகும்.

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள கொவிட் 19 வைரஸ் காரணமாக சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இடம்பெற்ற குறித்த நிகழ்வுகளில் செயலக நிருவாக உத்தியோகத்தர் எஸ்.ஏ.ஹமீட், மாவட்ட மேலதிக பதிவாளர் எம்.ஏ.மாஜிதீன் உள்ளிட்ட செயலக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் முழு ஆடைப்பால் மா வகைகளுக்கு பாரிய தட்டுப்பாடு

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் முழு ஆடைப்பால் மா வகைகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில வர்த்தக நிலையங்களில் இரு பால்மா வகைகளின் தயாரிப்புகளான யோகட்இ தேயிலை வாங்கினால் அந்த பால்மா வகைகளை வாங்கக் கூடியதாக உள்ளது என பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக மாவட்டத்திலுள்ள மொத்த வியாபார நிலையங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் மற்றும் சிறிய கடைகள் உட்பட மாவட்டத்திலுள்ள கடைகளில் முழு ஆடைப்பால் மா வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படப் போவதாக அறிந்த வசதிபடைத்த தனவந்தர்கள் மொத்த விற்பனைக் கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் உட்பட கடைகளில் முழு ஆடைப்பால் மா வகைகளை மொத்தமாக வாங்கிச் சென்றுள்ளனர்.

பால்மா விநியோகிக்கும் கம்பனிகள் பால்மா கொழும்பில் இருந்து வரவில்லை எனத் தெரிவித்து பால்மா விநியோகத்தை நிறுத்தியுள்ளன. சில நிபந்தனைகளுடன் சில பால்மாக்களை அந்தக் கம்பனிகள் விநியோகிப்பதாகத் தெரிவித்த போதும் அதனை வர்த்தகர்கள் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிலையில் பால்மா வகைகள் தங்களிடம் இல்லை என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பால்மா வகைகள் சில கடைகளில் உள்ளன. அதனை வாங்குவதாக இருந்தால் அந்த பால் மா கம்பனியின் தயாரிப்பான தலா 40 ரூபா பெறுமதியான 4 யோகட்டுகள் 160 ரூபாவுக்கு வாங்கினால் மட்டுமே 380 ரூபா பெறுமதியான 400 கிராம் பால் மாவை வாங்க முடியும். அவ்வாறே பால் மா கம்பனியின் தயாரிப்பான 100 கிராம் தேயிலையை வாங்கினால் அந்த பால் மாவை வாங்க முடியும் என சில வர்த்தக நிலையங்களில் இவ்வாறு வியாபாரம் இடம்பெறுகின்றது. அதே வேளை பால் மா வகைக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கையால் பால் மாவை மட்டும் வாங்க கடினப்படும் மக்கள் எவ்வாறு பால்மாவை வாங்கிக் குடிக்க முடியும் என பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் உரிய நடவடிக்கை எடுத்து பால் மா தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யவேண்டும் என தெரிவித்தனர்.

# உடல் உள திடகாத்தரத்துக்கான தேக பயிற்சி கூடம் திறப்பு






(வாஸ் கூஞ்ஞ)

பிறிஜிசின் லங்கா நிறுவனத்தாலே பெரியகுஞ்சுக்குளம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல வேலைத்திட்டங்களில் ஒன்றாக இவ் கிராமத்தில் இருக்கும் இளைஞர்களின் உடல் உள திடகாத்தரத்துக்கான தேக பயிற்சி கூடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நகரசபை உதவி தவிசாளரும் பிறிஜின் லங்கா நிறுவனத்தின் முக்கியஸ்தருமான ஜேம்ஸ் யேசுதாசன் தலைமையில் புதன் கிழமை இடம்பெற்ற இவ் நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் கலந்து கொண்டு இவ் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தார்.

# கைது செய்யப்பட்ட ஆசிரியர்களை விடுதலை செய்யுமாறு கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்





(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் அக்போபுர மகா வித்தியாலய ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோர்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட ஆசிரியர்களை விடுதலை செய்யுமாறும், சம்பள அதிகரிப்பினை மேற்கொள்ளுமாறு கோரி நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் அக்போபுர சிங்கள மகா வித்தியாலயத்திற்கு முன்னால் இவ் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பில் கைது செய்யப்பட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களை விடுதலை செய்வதோடு ஆசிரியர்களின் சம்பள பிரச்சினை நிவர்த்திக்குமாறும் கோரியே ஆசிரியர்கள் அதிபரினால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் முப்பதிற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டு எதிர்ப்பினை வெளியிட்டதோடு, பல வாசகங்கள் தாங்கிய பதாதைகளும் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்தார்கள்.

சம இடைவெளி பேணப்பட்டு ஆசிரியர்கள் கவனயீர்ப்பில் கலந்து கொண்டார்கள்.

# சமாதான நீதவானாக சத்திய பிரமாணம்



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர் எமில் நகர் கிராம அலுவலகப் பிரிவைச் சேர்ந்த அன்ரன் குதலேன் வெலிங்ரறாஜ் றெறன்ஸ் அகில இலங்கை சமாதான நீதவானாக மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பி.சிவகுமார் முன்னிலையில் புதன்கிழமை சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் திரு திருமதி அன்ரன் குதலேன் அக்னஸ் விஜியகுமாரியின் புதல்வனும், பொருளாதார பட்டதாரியும், மன்னார் பிரதேச செயலகத்தில் சமூக சேவைகள் திணைக்களத்தில் முதியோர்களுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் மற்றும் சமூகப் பணியில் ஈடுபாடு கொண்டவராகவும் செயல்பட்டு வருபவர் ஆவார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் மண்முனை மேற்கு பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடாத்திய

# கலைஞர்களுக்கான வண்மை விருத்தி செயலமர்வு

(வவுணதீவு நிருபர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் மண்முனை மேற்கு பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடாத்தும் கலைஞர்களுக்கான வண்மை விருத்தி செயலமர்வு மண்முனை மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வியாழக்கிழமை (05) நடைபெற்றது.

மண்முனை மேற்கு காலாசார உத்தியோகத்தர் எம். சிவானந்தராஜாவின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலாளர் எஸ். சுதாகர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் எஸ்.நவநீதன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.







கொவிட் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி பிரதேசத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்ற கலாசார வண்மை விருத்தி செயலமர்வில் கலாபூசனம் எம்.அருளம்பலம் கலந்து கொண்டு கலைஞர்களுடனான கலைப் பகிர்வினை மேற்கொண்டதுடன் கலை தொடர்பான ஆற்றுகைகளும் இடம்பெற்றது.

மேலும் இதன்போது, பிரதேச மக்களின் பாரம்பரிய கலைகளை மீளக் கட்டயெழும்பும் செயற்திட்டமாக கலந்திரையாடல்களும் இங்கு இடம்பெற்றது.

பாரம்பரிய கலைதொடர்பாகவும் இக் கலைகள் ஒவ்வெரு சமூகத்திலும் கட்டிக் காக்கப்படவேண்டும் என்பது தொடர்பில் இதன்போது கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் எஸ்.நவநீதன் கருத்துரை வழங்கினார்.

இந் நிகழ்வில் பிரதேச செயலக கலாசார பிரிவின் உத்தியோகத்தர்கள், பிரதேசத்தின் கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.






SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி



SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10



தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

Aaran Ayurveda
& Wellness Massage



Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# ‘மக்கள் பிரதிநிதியை 100 நாட்கள் கடந்தும் தடுத்து வைத்திருப்பது அதிருப்தி அளிக்கிறது’



(எம்.எல்.சரிப்டீன்)

முஸ்லிம் தலைவர்கள், அறிஞர்கள் அதிகாரத்தின் பிடியில் துன்புறுத்தப்படுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது' என அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் மாதாந்த பொதுச்சபை அமர்வு மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில், மாநகரகேட்போர்கூடத்தில் இடம்பெற்ற போதே மேற்படி தெரிவித்தார். மேலும் அங்கு அவர் உரை நிகழ்த்துகையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிஷாத் பதியூதீன் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு உரிய விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

றிஷாத் பதியூதீன் குடும்பத்தார் தற்போது எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அலசி ஆராய்கின்ற போது அரசியல், கட்சி, கொள்கைகளுக்கு அப்பால் எமக்கு மன வேதனை ஏற்படுகிறது. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் ஆளுகைக்கு உட்பட்ட சபை எனும் அடிப்படையில், எமது உறுப்பினர்கள் மற்றும் மக்கள் சார்பாக அரசாங்கத்தை வேண்டிக் கொள்வது, முன்னாள் அமைச்சர் றிஷாத் மீது குற்றங்கள் இருப்பின் உரிய விசாரணைகள் மூலம் அதனை நிரூபித்து சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். அப்படி அல்லாமல் ஒரு மக்கள் பிரதிநிதியை 100 நாட்கள் கடந்தும் தடுத்து வைத்திருப்பது அதிருப்தி அளிக்கிறது. இவ்விடயம் குறித்து நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அரசிற்கு நாம் கோரிக்கை விடுகின்றோம்.

மேலும், எமது உயிரிலும் மேலான கண்மணி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது முகநூலில் அவதூறு பரப்பி வந்த கருத்தினை பகிர்ந்து கொண்ட காரைதீவு தவிசாளர் மீது எமது அதிருப்தியை தெரிவிக்கும் அதே வேளை, இவ்விடயத்தை வைத்து இனங்களுக்கிடையில் பிளவுகளை, பூசல்களை உருவாக்க நினைக்கும் கீழ்த்தர அரசியல் நோக்கங்களும் இனம் காணப்பட வேண்டும் என்பதை மக்கள் பிரதிநிதிகள் கொண்ட பெறுமானம் மிக்க இச்சபை ஊடாக தெரியப்படுத்துகிறேன்.

உலகத்தின் உன்னத மனிதப் புனிதர் முஹம்மது றசூல் (ஸல்) அவர்களின் கண்ணியத்தில் ஒரு சிறு அணுவளவேனும் இது போன்ற அரை வேக்காட்டு பதிவுகளால் குறைந்து விடப் போவதில்லை எனவும் மாநகர பிதா அதாஉல்லா அகமட் ஸகி அங்கு மேலும் தெரிவித்தார்.

# கல்முனை பிரதான வீதி விபத்தில் இருவர் படுகாயம்

(ரக்ஸனா)

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் கிராங்குளத்தில் புதன்கிழமை மாலை இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்முனை பக்கமிருந்து மட்டக்களப்பு நோக்கி மோட்டார் சக்கிள் ஒன்று பணித்துக் கொண்டிருந்த வேளை அதே திசையில் எதிரே சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் சடுதியாக திரும்புவதற்கு முற்படுகையில் இரு மோட்டார் சைக்கிள்களும் ஒன்றோடு ஒன்று மோத்தியதால் இவ்விபத்துச் சம்பவித்துள்ளதாக இதனை அவதானித்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இருவரும் காயங்களுக்குட்பட்டு ஆரையம்பத்தி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளன. இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டன



(தலவாக்கலை பி.கேதீஸ்)

கொட்டக்கலை பிரதேசசபை உறுப்பினர் ராஜமணி பிரசாந்த் அவர்களின் வேண்டுக்கோளுக்கிணங்க கொட்டக்கலை பிரதேசசபை உறுப்பினர் பொன்னையா ரவிச்சந்திரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் கிறேட்வெஸ்டன் தோட்ட பிரிவுகளான கல்கந்தவத்தை, லூசா, ஸ்கல்பா ஆகிய தோட்டங்களுக்கு வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

# ஹிஷாலியின் விவகாரத்தை வைத்து தமிழ், முஸ்லிம் சமூகத்திற்கிடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சி

## இம்ரான் மஹ்ரூப்

(இஃஜாஸ் .ஏ பரீட்)



சிறுமி ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. இச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ், முஸ்லிம் சமூகத்திற்கிடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள்.

இவ்விடயத்தில் அரசியல் நோக்குடன் செயற்படுவது முற்றிலும் தவறாகும். இப்பிரச்சினையை இனப்பிரச்சினை என இரு சமூகமும் கருத வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், சிறுமி ஹிஷாலினியின் மரணம் விவகாரம் அரசியல் தேவைக்காக பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது.

ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் இவ்விடயத்திற்கு நீதி வேண்டும். என்று வீதிக்கிறங்குவது . அநாவசியமானது. முறையான விசாரணைகள் இடம் பெறுமாயின் போராட வேண்டிய தேவை கிடையாது.

ஆகவே சிறுமியின் மரணம் தொடர்பிலான விசாரணைகளின் பிரகாரம் குற்றவாளி என நீதிமன்றினால் நிரூபிக்கப்படுபவர்களுக்கு நிச்சயம் தண்டனை வழங்கபட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

# ஆசிரியர் மீதான அடக்கு முறையினால் சிறிமா ஆட்சி கவிழ்ந்ததை தற்போதைய அரசாங்கம் மறந்து விட்டதா?

## கிழக்கு மாகாண கல்வி நிருவாக அதிகாரிகள் சங்கம் அறிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)



சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் ஆசிரியர்களின் போராட்டத்தை குதிரைப் படை வீரர்களைக் கொண்டு அடக்க முயற்சித்ததன் விளைவாக 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அவரது கட்சி படுதோல்வி அடைந்து, எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை கூட இழந்த வரலாற்றை தற்போதைய ஆட்சியாளர்கள் மறந்து விடக் கூடாது என இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கச் செயலாளர் ஏ.எல்.முகம்மத் முக்தார் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

அரசதுறையில் மிகக்கூடிய எண்ணிக்கையானோர் ஆசிரியர்களாவர். ஆசிரியர்கள் நினைத்தால் ஆட்சியையும் மாற்ற முடியும். பாடசாலைகளில் கல்வி கற்கும் சுமார் 46 இலட்சம் மாணவர்களின் தலைவிதி இவ்வாசிரியர்களிடமே உள்ளது.

ஒரு ஆசிரியர் பெறுகின்ற 35,000 முதல் 45,000 ரூபா வரையான சம்பளத்தின் மூலம் அன்றாட செலவைக் கூட ஈடுசெய்ய முடியாது அந்தரப்படுகின்றனர். குரு செத எனும் கடனை ஆசிரியர்களே அதிகமாக பெறுவதையும் காண்கிறோம்.

ஆசிரியர்கள் தமது உரிமைக்காக போராட்டத்தை நடாத்துகிறார்கள். அவர்களது நியாயமான கோரிக்கைகளைதட்டிக்கழிக்கும் விதத்தில், நையாண்டி பண்ணும் விதத்தில் அமைச்சர்கள் சிலர் செயற்படுவது ஏற்புடையதல்ல.

அரசாங்கத்திடம் பணம் இல்லையென கூறப்படுகிறது. ஆனால் பணம் இல்லாத நிலையில் கமிசன் வழங்கும் வீதி அபிவிருத்தி, பாலம் அமைப்பு போன்றவை தாராளமாக இடம்பெறுகிறன. இதற்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது.

அண்டை நாடான இந்தியாவில் கொரோராகாரணமாக02 ஆண்டுகளுக்கு சகல அபிவிருத்தி வேலைகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அங்கு எம்.பி.க்களுக்கான அபிவிருத்தி நிதியையும் நிறுத்தி, மக்களது தேவைக்கு முன்னுரிமை அளிக்கபட்டுள்ளது. ஆனால் இலங்கை அவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. இது கொள்கை வகுப்பாளர்கள் விடும் பாரிய தவறாகும்- எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கலாநிதி அனுஷியா சேனாதிராஜா எழுதிய நூல் வெளியீடு !





(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக சமூக விஞ்ஞான துறைத்தலைவர் கலாநிதி அனுஷியா சேனாதிராஜா எழுதிய Indo& Srilanka Relationship (1948-1964) With Special Reference To TamilNadu எனும் நூல் வெளியீடு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாச்சார பீடத்தின் அரங்கில் அரசியல் விஞ்ஞான துறைத் தலைவர் பேராசிரியர் எம்.எம்.எம். பாஸீலின் தலைமையில் இடம்பெற்றது.

அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர் டீ. பாத்திமா சாஜிதாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் அரசியல் விஞ்ஞான துறைத்தலைவர் பேராசிரியர் எம்.எம். எம். பாஸீல் நூல் ஆய்வுரையை நிகழ்த்தினார். தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் எம்.எம். நாஜிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நூலாசிரியர் கலாநிதி அனுஷியா சேனாதிராஜா தொடர்பிலும் அவர் வெளியிட்டுள்ள இந்த நூலின் முக்கியத்துவம், சிறப்பியல்வுகள் தொடர்பிலும் உரையாற்றினார். கலை, கலாச்சார பீடத்தின் பீடாதிபதியும் தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள வருமான பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் இந்திய இலங்கை அரசியல், பொருளாதார உறவுகள் தொடர்பில் உரையாற்றினார். மேலும் முதுநிலை பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் மற்றும் பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல் ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினர்.

நூலாசிரியர் கலாநிதி அனுஷியா சேனாதிராஜாவின் ஏற்புரையுடன் நிறைவுபெற்ற இந்நிகழ்வில் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்பட கல்வி சார், கல்வி சாரா உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# சத்தியப்பிரமாண நிகழ்வு



(ரக்ஸனா)

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சாதாரண மக்களில் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பதற்கு முன்னின்று உழைப்பதன் மூலமே அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தை வெற்றி கொள்ள முடியும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சருமான எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓட்டமாவடி பிரதேச சபையின் புதிய பிரதேச சபை உறுப்பினரின் சத்தியப்பிரமாண நிகழ்வு பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தலைமையில் இடம் பெற்றது.

அங்கு உரையாற்றும் போதே இக் கருத்துக்களை அவர் தெரிவித்தார்.

கடந்த 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைத்த ஒரு ஆசன அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த ஒருவர் அப்பதவியை தாமாகவே முன்வந்து இராஜினாமா செய்தமையினை தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேக்கர குறித்த பிரதேச சபையின் உறுப்பினர் வெற்றிடத்திற்கு அப்பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்ட பட்டியல் வேட்பாளர் எம்.ரீ.எம். பைறூஸ் என்பவரை நியமித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி கடந்த ஜூலை மாதம் 30ஆந் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டிருந்தது. அதைத்தொடர்ந்து பிரதேச சபை உறுப்பினரின் சத்தியப்பிரமாண நிகழ்வு புதன்கிழமை மாலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சருமான எம்.எஸ்.சுபையிர், பிரதேசசபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் முன்னிலையில் இடம்பெற்றது.

# கொத்தலாவல சட்டத்தை முழுமையாக எதிர்ப்போம் அட்டன் நகரில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்




(க.கிஷாந்தன்)

கல்வியை விற்பனை செய்வதற்காக கொண்டு வந்துள்ள இராணுவ நிர்வாகத்தை நிறுத்து, இலவச கல்வியை ஒழிப்பதற்காகாக இராணுவ இயந்திரத்தை அமைத்து தற்காலிகமாக சுருட்டிக்கொண்ட கொத்தலாவல சட்டத்தை முழுமையாக எதிர்ப்போம் என கோரிக்கை விடுத்து அட்டன் நகரில் கொத்தலாவல பிரேரணைக்கு எதிரான கூட்டு நிலைய செயற்பாட்டளர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியை நேற்று காலை நடத்தினர்.

அட்டன் புட்சிட்டிக்கு அருகில் ஆரம்பமான இந்த ஆர்பாட்டத்தில் ஆசிரியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என நூற்றுக்கு அதிகமானோர் கலந்து கொண்டனர்.

இவர்கள் தங்களது கோரிக்கைகளை பதாதைகள் ஊடாக வெளிப்படுத்தி அதை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி கொண்டு பேரணி ஒன்றையும் முன்னெடுத்தனர்.

இந்த பேரணி புட்சிட்டி அருகில் ஆரம்பமாகி அட்டன் நகர மத்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் ஒன்றிணைந்தது.

அவ்விடத்தில் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கொத்தலாவல சட்ட மூலத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பியதுடன், ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் போராட்டங்கள், கைது நடவடிக்கைகள் ஆகியவற்றை வெளிக்கொனர்ந்து முழக்கங்களை எழுப்பினர்.




# திட்டம் கைகூடும்போது பொதுமக்களிடமிருந்து பொலித்தீன் கழிவுகளை கொள்வனவு செய்ய முடியும்

## மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு விசேட நிருபர்)



மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பாரிய பிரச்சனையாக அமைந்துள்ள பொலித்தீன் பாவனையினை அடிப்படையாக கொண்டு பொலித்தீன் கழிவுகளை மீள் சுழற்சி செய்வது தொடர்பாக ஆராயும் கலந்துரையாடலொன்று மட்டக்களப்பு மாநகர சபையில் இடம்பெற்றது.

ஏஜீசி இனோவேட் பிரைவட் லிமிற்ரெட் நிறுவனத்தின் நிபுணர் குழுவினர் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு மாநகர சபைக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டு குறித்த கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த விஜயத்தின் போது மாநகர சபையின் ஆணையாளருடன் இடம்பெற்ற பொலித்தீன் கழிவுகளை மீள்சுழற்சி செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடலின் பின்னர் திருப்பெருந்துறையில் உள்ள மட்டக்களப்பு மாநகர சபைக்கு சொந்தமான மீள்சுழற்சி மையத்திற்கு சென்று அங்கு பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்கான முறைகளையும், குறித்த பொலித்தீன் கழிவுகளை கொண்டு தார் உற்பத்தி மேற்கொள்ளுவது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டதுடன், குறித்த திட்டத்தினை மேற்கொள்ளும் முறைமைகள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்த திட்டத்தின் அடிப்படையில் ஏஜீசீ இனோவேட் பிரவேற் லிமிட்ரெட் நிறுவனத்தின் நிபுணர் குழுவினர் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் பெறப்படும் கழிவுகளை அம்பாறையில் காணப்படும் குறித்த நிறுவனத்தின் மீள்சுழற்சி நிலையத்திற்கு கொண்டு சென்று மீள்சுழற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது தொடர்பில் திட்ட முன்மொழிவினை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த செயற்திட்டம் தொடர்பில் ாநகர ஆணையாளர் மா.தயாபரன் தெரிவிக்கையில், குறித்த செயற்திட்டத்தின்மூலம் பொலித்தீன் கழிவுகளை குறித்த நிறுவனத்தினருக்கு விற்பனை செய்வதனால் மட்டக்களப்பு மாநகர சபைக்கு வருமானத்தை பெறக்கூடியதாக உள்ளத்துடன், கழிவுகளை சேகரிக்க விரையமாகும் பண விரையத்தை கட்டுப்படுத்த கூடியதாகவும், சூழலில் உள்ள கழிவுகளை குறைக்கக்கூடியதாக அமைவதுடன் பொதுமக்களிடமிருந்து பணத்தை கொடுத்து குறித்த கழிவு பொருட்களை தரம்பிரித்து வாங்கக்கூடியதாக அமையும் இதனால் சூழல் அழகுபடுத்தப்படுவதுடன், தூய்மையாகவும் காணப்படும் என தெரிவித்தார்.

குறித்த செயற்திட்ட ஆராய்வு நடவடிக்கையில் மாநகர பிரதி ஆணையாளர் மற்றும் ஏசீஜீ இனோவேட் பிரவேற் லிமிட்ரெட் நிறுவனத்தின் நிபுணர் குழுவினரும் கலந்துகொண்டிருந்தனர்.

# அறுவடை முடித்து வீடு சென்ற விவசாயி யானை தாக்கி மரணம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்தானை கல்கணி எனும் இடத்தில் வைத்தே இச் சம்பவம் புதன்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வேளாண்மை அறுவடையை முடித்துக் கொண்டு துவிச்சக்கர வண்டியில் தனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த வாகனேரி - பொட்டுக்குளம் பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய சின்னத்தம்பி வேலுப்பிள்ளை என்பவரே இவ்வாறு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

கடுமையான முறையில் யானை தாக்கி மரணமடைந்த நபரின் உடல் தற்போது வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதி விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யானை தாக்கி கல்கேனியில் விவசாயி மரணம்





(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் கல்கேனி எனும் வயற்பிரதேசத்தில் நேற்று (புதன்கிழமை) இரவு காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் உயிர் இழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் பொட்டுக்குளம் வாகனேரி கிராமத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான சின்னதம்பி வேலுப்பிள்ளை (வயது 59) என்பவரே உயிர் இழந்துள்ளார்.

இவர் வழமை போன்று வயல் வேலைகளை முடித்து விட்டு தமது இருப்பிடம் நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் காட்டுக்குள் இருந்து பிரவேசித்த யானை இவரைத் தாக்கியுள்ளது.

ஸ்தலத்திலேயே உயிர் இழந்த சடலத்தை ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் வாழைச்சேனை பொலிஸார் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் சென்று பார்வையிட்டதுடன் மக்களின் உதவியுடன் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் குறித்த பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக யானைகளை கட்டுப்படுத்துவதற்கான யானை வேலிகள் அமைக்க வேண்டும் என விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# ஹிசாலினிக்கு நீதி கோரி தலவாக்கலையில் போராட்டம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 16 வயது சிறுமி ஜூட்குமார் ஹிசாலினியின் மரணத்திற்கு நீதி கோரி மலையகத்தில் மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களையும், ஆத்ம சாந்தி பூசைகளையும் நடத்தி வருகின்றனர். அந்தவகையில் சிறுமியின் இறப்புக்கு நீதி வேண்டும். குற்றவாளிகள் அனைவரும் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு தக்க தண்டனை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி தலவாக்கலை கிறேட்வெஸ்டன் லூசா தோட்ட மக்களால் அத்தோட்டத்தில் வியாழக்கிழமை காலை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

டயகம சிறுமியின் மரணம் தொடர்பில் உண்மை கண்டறிப்படவேண்டும். இவ்விடயத்தில் சட்டம் உரிய வகையில் செயற்பட வேண்டும், இச்சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவருக்கும் தண்டனை வழங்கப்படவேண்டும் என போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பியதோடு பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

இனிமேல் மலையகத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற கூடாது எனவும் போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர். இப்போராட்டத்தில் கொட்டக்கலை பிரதேச சபை உறுப்பினர் ரவிச்சந்திரனும் கலந்துக்கொண்டு சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி கோசங்களை எழுப்பி தனது கருத்துக்களை தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று பனங்காடு பாசுபதேசுவரர் வித்தியாலயத்தின் மதில்கள் சுவரோவியங்களால் அழகுபடுத்தப்பட்டு வருகின்றது

(வி.சுகிர்தகுமார்)

திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று பனங்காடு பாசுபதேசுவரர் வித்தியாலயத்தின் மதில்கள் விழிப்பூட்டல் மிகு அழகிய சுவரோவியங்களால் அழகுபடுத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர் ஆர்.சுவர்ணராஜின் முயற்சியின் பயனாக அதிபர் த.இந்திரன் மற்றும் அபிவிருத்தி சங்கத்தின் ஒத்துழைப்போடு இடம்பெற்றுவரும் இப்பணிகளில் பல்வேறு தரப்பினரும் நிதி உதவியினை வழங்கி பாடசாலையின் அழகுபடுத்தலுக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி மற்றும் சுற்றச் சூழலை பாதுகாப்பு அழகுபடுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் சமூகமும் கைகோர்த்து செயற்படவேண்டியது அவசியமானதாகும்.

அவ்வாறு செயற்படும்போதே சிறந்த வளர்ச்சியினை பாடசாலைகளும் அடைந்து கொள்ள முடியும்.

இதற்கு முன்னுதாரணமாகவே திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட பனங்காடு பாசுபதேசுவரர் வித்தியாலய அபிவிருத்தி சங்கமும் கிராம அபிவிருத்தி சங்கமும் பொதுமக்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

பாடசாலையின் கல்வி அபிவிருத்தி மாத்திரமன்றி பௌதீகவள அபிவிருத்தியில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக பாடசாலைக்கு





தேவையான சிசிரிவீ கமரா பொருத்தும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதுடன் பாடசாலையின் மதிலினை அழகிய சித்திரங்கள் வரைவதன் மூலமும் அழகு படுத்தி வருகின்றனர்.

மதில்களை அழகுபடுத்தும் சுவரோவியங்களை ஓவியர் மகேசன் வரைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வடிகானமைப்புத் திட்டம் பிரதேச செயலாளரிடம் கையளிப்பு



(ரக்ஸனா)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் ஜனதாக்ஸன் நிறுவனத்தின் அனுசரணையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை ஊடாக வவுணதீவுப் பிரதேசத்தின் கரவெட்டிக் கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்ட வடிகான் திட்டத்தை பிரதேச செயலாளரிடம் உத்தியோக பூர்வமாக புதன்கிழமை கையளிக்கப்பட்டது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை செயலாளர் சா.மதிசுதன் இத்திட்டத்தை உத்தியோக பூர்வமாக மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரனிடம் கையளித்தார்.

இதன்போது இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைத் தலைவர் த.வசந்தராசா, பொருளாளர் வ.சக்திவேல், கிளை நிறைவேற்று உத்தியோகஸ்த்தர் திருமதி பி.வேணுஷா, திட்டத்திற்குப் பொறுப்பான திட்ட உத்தியோகஸ்த்தர் எஸ்.ருத்திராஜ், மற்றும் கிளை உத்தியோகஸ்த்தர் க.விஸ்வநாத், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# சஹ்ரானின் மூலமாக தவிசாளருக்கு கொலை எச்சரிக்கை விடுப்பது நிரந்தர தீர்வாகாது



(துறையூர் சஞ்சயன்)

சஹ்ரானின் அமைப்பு மூலமாக தவிசாளருக்கு கொலை எச்சரிக்கை விடுப்பது நிரந்தர தீர்வாகாது; அவ்வாறு விடுக்கப்படுவது இன முரண்பாட்டையே தோற்றுவிக்கும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசு கட்சித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

காரைதீவு தவிசாளர் கி.ஜெயசிறிலுக்கு சஹ்ரானின் பெயரில் குரல் பதிவு ஒன்றை சமூக வலைத்தளம் ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாக ஊடகவியலாளர் கருத்து கேட்டபோது மேலும் கூறுகையில்,

காரைதீவு தவிசாளர் கி.ஜெயசிறிலுக்கு தொலைபேசி ஒலிப்பதிவு மூலமாக தடை செய்யப்பட்ட முஸ்லிம் அமைப்பான சஹ்ரானின் பெயரில் அச்சுறுத்தல் விடுத்துள்ள விடயம் வேடிக்கை பார்க்கும் விடயமல்ல, இதற்கு பின்னணியில் யார் உள்ளனர் என்பதை பொலிசார் தீவிரமாக ஆராய்ந்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அதேவேளை அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஷ், இதற்கு என்ன கூறுகிறார் என்பதை சொல்லவும் வேண்டும். காரைதீவு தவிசாளர் முகநூலில் யாரோ ஒருவர் பதிவிட்ட இஸ்லாம் மதம் சம்பந்தமான பிழையான பதிவை அவரும் பரப்பினார் என்று அவருக்கு எதிராக காரைதீவு பிரதேசசபையில் உள்ள முஸ்லிம் பிரதிநிதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆனால் தாம் அவ்வாறு முஸ்லிம் மதம் தொடர்பான அவதூறாக எந்த கருத்தையும் பதிவிடவில்லை என பலமுறை கூறியுள்ளார். இதனை நம்பாத சிலர் பொலிஸ் முறைப்பாடுகளும் பல இடங்களில் செய்து வருகின்றனர். அதற்கான விசாரணைகளும் இடம்பெறுகின்றன.

இது இவ்வாறு இருக்கும் நிலையில், இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பு தலைவர் சஹ்ரானின் பெயரை குறிப்பிட்டு, தாம் அந்த அமைப்பை சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிட்ட காரைதீவு தவிசாளர் கி.ஜெயசிறிலுக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் கொலை அச்சுறுத்தல் குரல் பதிவுகளை சஹ்ரானின் பெயரில் அனுப்பியுள்ளமை இலங்கையில் இன்னும் சஹ்ரானின் பயங்கரவாத அமைப்பு செயல்படுகிறது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் வேடிக்கை பார்க்கும் சாதாரண விடயமாக எண்ணி அதை கைவிடமுடியாது. இதற்கு பின்னணியில் யார் யார் உள்ளனர், யார் காரைதீவு தவிசாளரின் தொலைபேசி இலக்கத்தை சஹ்ரான் இயக்கத்தில் உள்ளவர்களுக்கு வழங்கினார்கள். இலங்கையில் சஹ்ரான் அமைப்பு முகவர்கள் அம்பாறை மாவட்டத்தில் யார் உள்ளனர் என்ற விடயங்கள் ஆராய்ந்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

காரைதீவு பிரதேசபை தவிசாளர் கி.ஜெயசிறில், நபிகள் நாயகம் தொடர்பாக பதிவிட்ட கருத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏன் மௌனம் காக்கிறது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என ஊடகங்களில்

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எஷ்.ஹரீஷ், கேள்வி எழுப்பி இருந்தார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டு அறிந்து கொண்டபோது, தாம் அவ்வாறான கருத்து எதுவும் பதிவிடவில்லை எனபதை எமக்கு ஆணித்தரமாக கூறிவிட்டார். அவ்வாறு தாம் அப்படி செய்யவில்லை என கூறும்போது எப்படி நடவடிக்கை எடுப்பது. கூட்டமைப்பில் நடவடிக்கை எதிர்பார்க்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஷ் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறு எமது கட்சியூடாக நடவடிக்கை எதிர்பார்த்திருப்பின் ஏன் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது? பொலிசில் முறைப்பாடு செய்வதற்கு முன்னம் கூட்டமைப்புடன் அணுகி இதற்கான ஒரு தீர்வை பெற ஏன் சிந்திக்கவில்லை. பொலிசில் முறையிட்டு விட்டு கூட்டமைப்பு மௌனம் சாதிக்கிறது என கூறுவது எந்த வகையில் நியாயம்.

காரைதீவு தவிசாளருக்கு சஹ்ரான் பெயரைப் பயன்படுத்தி கொலை அச்சுறுத்தல் குரல் பதிவு செய்தமைக்கு அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் காப்பதன் நோக்கம் என்ன? காரைதீவு பிரதேச சபை முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் இதற்கான பதிலை கூற வேண்டும். இலங்கையில் சஹ்ரான் அமைப்பு இன்னும் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா? இப்படி பலவிதமான வினாக்களை பலரும் கேட்கலாம்.

எம்மை பொறுத்தவரை காரைதீவு பிரதேச சபை தமிழ் முஸ்லிம் மக்களை உள்ளடக்கிய சபை. இது தொடர்ந்தும் ஒற்றுமையாக எதிர்கால அபிவிருத்தி திட்டங்களை செய்ய வேண்டும். இந்த சபையில் யார் தவறாக அல்லது கருத்து முரண்பாடாக இருப்பின் அதனை பேசித்தீர்ப்பதே சிறந்த அணுகுமுறை.

இலங்கை அரசானது சஹ்ரானின் பெயரில் குரல் எச்சரிக்கை பதிவு செய்தவர்கள் இதற்கு உறுதுணையாக நின்றவர்களை கண்டறிந்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மேலும் கூறினார்.

# நந்தவனப்பிள்ளையாரின் ஆடி அமாவாசை திருவிழா!



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு நந்தவன சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த ஆடிஅமாவாசை உற்சவ திருவிழாக்கள் சுகாதார நடைமுறைப்படி நடைபெற்று வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான குறித்த உற்சவம் தொடர்ந்து 9நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையுமென ஆலய தர்மகார்த்தா இரா.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

தற்போது தினமும் ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் பகல் இரவு விசேட பூஜைகளுடன் திருவிழாக்கள் குறைந்த பக்தர்களின் பிரசன்னத்துடன் நடைபெற்றுவருகிறது.

வழமைக்குமாறாக இம்முறை சமுத்திரத்தில் அல்லாது ஆலய தீர்த்தக்கிணற்றில் தீர்த்தமாட உத்தேசித்துள்ளதாக அவர் மேலும் சொன்னார்.

# அதிபர் ஆசிரியர்களின் போராட்டத்தை இந்த அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்குவதை நிறுத்த வேண்டும்

(கதிரவன்)

ஆசிரியர்கள் சமுதாயத்தில் மிகவும் முக்கியமான வகிபங்கைக் கொண்டிருப்பவர்கள். தனியாக ஊதியத்தை மட்டும் கருதாமல் சொந்த பந்தம் அல்லாத இன மதம் பாராத சகல பிள்ளைகளையும் தங்கள் மாணவச் செல்வங்களாக நினைத்து கல்வியைப் போதிப்பவர்கள். எனவே அவர்களின் சம்பள முரண்பாட்டிற்கான போராட்டம் நியாயமானது. இது ஒரு ஜனநாயக ரீதியான நியாயமான போராட்டம். காலங்காலமாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக வாக்குறுதிகளை மட்டும் வழங்கிவிட்டு அதனை நிறைவேற்றாது கைவிடும் நிலையே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக நாடு பூராகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் அதிபர்களின் போராட்டங்கள் மிகவும் வலுப்பெற்று இருக்கும் நிலையில் ஆசிரியர்களைக் கைது செய்ததன் மூலமாக இந்த அரசாங்கமானது தனது இரும்புக் கரங்களைக் கொண்டு இப் போராட்டத்தை அடக்க முற்பட்டிருப்பதானது மிகவும் கண்டிக்கத்



தக்கது. இவ் ஆசிரியர்களை உடனடியாக விடுவிக்க சகல அரசியற் கட்சிகளும் கட்சி பேதங்களை மறந்து குரல் கொடுக்க வேண்டும்.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலே அரச உயர் அதிகாரிகளிடம் தங்களுக்கு நற்பெயர்களை ஏற்படுத்திக் கொள்ளவும் எதிர்காலத்தில் பின்கதவால் சென்று முறையற்ற விதத்தில் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளவும் பல அதிபர்கள் முற்படுவது இப் போராட்த்தைக் காட்டிக்கொடுப்பதற்கு ஒப்பானதாகும். எனவே கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் எவ்வித நிபந்தனைகளும் இன்றி உடனடியாக விடுதலை செய்யப்பட அனைத்து அரசியற் கட்சிகளும் முன்வர வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) வின் நிர்வாகச் செயலாளர் நித்தி மாஸ்டர் தெரிவித்துள்ளார்.




# மார்க்கண்டு கலியுகவரதன் 29 வருட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையிலிருந்து ஓய்வு

(துறையூர் சஞ்சயன்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதம முகாமைத்து உதவியாளராக கடைமாற்றி வந்த மார்க்கண்டு கலியுகவரதன் தனது 29 வருட அரச முகாமைத்து உதவியாளர் சேவையில் இருந்து 2021.08.06 ஆம் திகதி முதல் ஓய்வு பெறுகிறார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் பிறந்த காரைதீவு கிராமத்தைச் சேர்ந்த மார்க்கண்டு கலியுகவரதன், பாண்டிருப்பில் திருமணம் பந்தத்தினை ஏற்படுத்தி வசித்து வருகிறார்.

இவர், தனது ஆரம்பக் கல்வியை காரைதீவு இராகிருஸ்ணமிஷன் ஆண்கள் பாடசாலையிலும், விபுலாநந்தா மத்திய கல்லூரியில் உயர் கல்வியையும்



கற்றவர். 1990 இல் நடைபெற்ற அரச எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் அம்பாறை மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததினைத் தொடர்ந்து 1992 ஆம் ஆண்டு தொடக்கம் அரச சேவையில் இணைந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள காணி மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எழுதுவினைஞராக ஆறு வருடங்கள் கடமையாற்றியுள்ளார். அதன் பின்பு 1999 இல் இருந்து கல்முனை காணி மேலதிக மாவட்ட பதிவாளர் திணைக்களத்தில் 2001 வரை கடமையாற்றினார். 2001 இருந்து 200% வரை ஏழு வருடங்கள் நாவிதன் வெளி பிரதேச செயலகத்தில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகவும், 200% இல் இருந்து 2010 வரை கல்முனை பிரதேச செலகத்திலும், மீண்டும் 2010 இல் இருந்து 2018 வரை நாவிதன்வெளி பிரதேச செயலகத்திலும் பிரதம முகாமைத்துவ அலுவலகராககடமையாற்றியுள்ளார். அதன் பின்பு 2018 தொடக்கம் தற்போது ஓய்வு பெற்றுச்செல்லும் வரை கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதம முகாமைத்துவ அலுவலகராக கடமையாற்றி ஓய்வு பெறுகிறார்.

ஓய்வு பெறும் மார்க்கண்டு கலியுகவரதன் பல்வேறு பொது நல அமைப்புகளின் பிரதிநிதியாக செயற்பட்டு சமய, சமூகப்பணிகளில் ஈடுபட்டு வருகிறார். சிறுவயது முதல் இசைத்துறையில் ஆர்வம் கொண்ட இவர், சிறந்த பாடகராகவும் அகரம் கலைக்கழகத்தின் ஆலோசகர்களில் ஒருவராகவும் செயற்பட்டு வருகிறார். மார்க்கண்டு கலியுகவரதன் தனது 60 ஆவது வயதில் 29 வருட அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்கிறார்.

# பிரதமருக்கு இந்து குருபீடம் வாழ்த்து



(தலவாக்கலை பி.கேதீஸ்)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவியேற்று அவரின் தலைமையில் புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு இன்று 6.8.2021 ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. இலங்கை மக்களுக்கு அவரது சேவை மேலும் கிடைப்பதற்கு இந்நாளில் எல்லாம் வல்ல இறைவன் ஆசிகளை வழங்க வேண்டுமென சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளர் சிவ ஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா இந்துமத பீடம் சார்பாக பிரதமருக்கு அரசாங்கத்துக்கும் தனது வாழ்த்துகளையும் ஆசிகளையும் தெரிவித்துள்ளார்.

தனது வாழ்த்து செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இலங்கையில் இருமுறை ஜனாதிபதியாக இருந்தவர். அவரது ஆட்சிக்காலத்திலேயே எவராலும் வெல்ல முடியாத உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு இலங்கையை சமாதான பூமியாக உலகுக்கு எடுத்துக்காட்டப்பட்டது. சமாதானத்தின் தந்தை என்றே இலங்கை மக்களால் அவர் போற்றப்படுகின்றார். அத்தோடு, இலங்கை அன்னையின் தவப்புதல்வனாகவும் இலங்கை வாழ் மக்கள் அனைவராலும் மதிக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றார். இவரின் தலைமையின் கீழ் யுத்தத்தை வெற்றிகண்டதுபோல தற்போது ஜனாதிபதியுடன் இணைந்து நாட்டை கொரோனா தொற்றிலிருந்து மீட்டிடெடுப்பார் என்ற நம்பிக்கையும் மக்களுக்கு உண்டு என்றார்.